# Summaries in Tamil

**இலத்தீன் அமெரிக்காவில் அரசியல் வன்முறையிலிருந்து உயிர்பிழைத்தோருடனான உளசமூக ஆய்வு மற்றும் செயற்பாடுகள்: செய்முறையில் கவனத்திற்கொள்ள வேண்டியவையும் நடைமுறை விளைவுகளும்**

யுத்தத்தின் விளைவுகள், அரசியல் ஆதிக்கம் என்பவற்றின் விளைவுகளைப் பகுப்பாயும் எந்தவொரு ஆய்வும் உயிர்பிழைத்தோர் வாழ்ந்துவரும் சமூக மற்றும் அரசியல் உண்மை நிலைப்பாட்டைக் கருத்தில் கொள்ளவேண்டும் என இலத்தீன் அமெரிக்காவில் அரசியல் வன்முறையிலிருந்து உயிர்பிழைத்தோருடனான உளசமூக ஆய்வு தெளிவாகக் காண்பித்துள்ளது. வன்முறையை எதிர்கொள்ளும் சமூகத்துடனான ஆய்வுகள் செயற்பாட்டுடனும் இடையீடுகளுடனும் கூடவே நடாத்தப்பட வேண்டுமென்றும் மேலும் கூறுகிறது. இக் கடடுரையில் யுத்தம் மற்றும் அரசியல் வன்முறை தொடர்பான ஆய்வுகளுக்கான அடிப்படை வழிகாட்டல்களை இதன் எழுத்தாளர்கள் ஆராய்ந்துள்ளனர். சமூகத்திற்குப்பயனான முறையில் தொழிற்பட வேண்டுமெனில் ஆராட்சியாளர் கடைப்படிக்க வேண்டிய விடையங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலாக, உளசமூக ஆய்வொன்றின் செயன்முறை விளைவுகள் மற்றும் பின்னோக்கிப் பார்ப்பதன் முக்கியத்துவத்தையும் விபரித்துள்ளனர். அறிமுறை விளக்கங்கள் ஆர்ஜென்ரீனாவின் துரதரலயில் முன்நாள் அரசியல் கைதிகளுடன், அவர்களின் உறவினர்கனுடன் நடந்த ஆய்வின் உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன (1976-1983).

**முக்கிய சொற்கள்:** செயலாய்வு, அரசியல் வன்முறை, உளசமூகம், ஆர்ஜென்ரீனா

---

**சித்திரவதைப்படுத்தப்பட்டு வீதிக்குத் துரத்தப்பட்டவர்கள்: ஓர் ஆய்வுத் திட்டம் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள்**

சித்திரவதையும் நாடுகடத்தலும் இணைந்து மக்களை மிகச் சிரமப்படுத்தும் போது அவர்கள் மேலும் ஆபத்து நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் மேலும் உரிமை மீறலுக்கு ஆளாகும் வாய்ப்புக்குள்ளாகுவர். இவர்களுக்கு ஆதரவு மற்றும் இடையீடுகள் கிடைக்காது. தென் ஆபிரிக்காவின் ஜொகானஸ்பேர்க் இல் வாழும் சித்திரைவதை செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட மக்கள் பற்றிய ஓர் ஆய்வு இது. இக் குழுவினர் தமது தனிப்படுத்தலுக்குத் தாமே பங்களிப்பதைப் பற்றி கற்றுக்கொள்வதே மிகப் பெரிய சவால் ஆகும் என இதன் எழுத்தாளர் கூறுகிறார். ஆய்வு மேற்கொள்ளும் போது ஏற்படும் சிக்கல்கள், அதற்கான முடிவுகள் ஆலோசிக்கப்படுகின்றன.

அவற்றில் சில: மாதிரித் தெரிவு, துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்தல், விரக்தி, ஆபத்துக்கள், நேர்காணல் சவால்கள், மொழி, ஆய்வு ஏற்பாடுகள், உள்நாட்டு சட்டங்கள், ஆய்விலீடுபடுவோருக்கான பாதுகாப்பு. இறுதியாக, வளர்ந்து வரும் நாடுகளில் வாழும் சித்திரவதைக்குள்பட்ட மக்களுக்கான பாதுகாப்பு, ஆதரவு என்பவற்றை கொள்கை வகுப்பாளர்கள் பெற்றுக் கொடுக்க வாய்ப்பளிக்கும் என்ற நம்பிக்கையில் ஆய்வுக்கான ஓர் திட்டம் முன்வைக்கப்படுகிறது.

**முக்கிய சொற்கள்:** சித்திரவதை, அகதிகள், ஆய்வு முறைமை, நகரநிலைமை, தென்ஆபிரிக்கா

---

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஊனமுற்ற பிள்ளைகளை உளசமூகத் திட்டங்களில் உள்வாங்கல்**

மற்றயபிள்ளைகளைவிட ஊனமுற்ற குழந்தைகள் யுத்தப் பிரதேசங்களில் ஆபத்து நிலைக்கு ஆளாகவும் உளசமூகப் பிரச்சினைகளுக்காளாகவும் அதிக வாய்ப்புகள் உண்டு. ஊனமுற்ற குழந்தைகளும் ஏனைய குழந்தைகள் போல, ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சாசனத்தில் மற்றும் ஊனமுற்றோருக்கான சாசனத்தில் குறிப்பட்டது போல் உளசமூக சேவைகளுக்கு உரித்தானவர்கள். எனினும் ஊனமுற்ற பிள்ளைகள் உளசமூகத்திட்டங்களில் இணைத்துக்கொள்ளப்படுவதில்லை. இக் கட்டுரையில் இதன் எழுத்தாளர்கள் பிள்ளைகளை உள்வாங்குவதில் உள்ள சிக்கல், அதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்கிறார்கள்.

**முக்கிய சொற்கள்:** ஊனமுற்ற பிள்ளைகள், உள்வாங்கல், உளசமூகத்திட்டம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள், யுத்த முரண்பாடு

---

**ஈராக்கில் சிறுவர் மற்றும் கட்டிளம் பருவத்தினரின் மனநலம்: தற்போதைய நிலைப்பாடுகளும் முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்களும்**

வன்முறையும் நிலையற்ற தன்மையும் ஈராக்கில் சிறுவர்களிலும் கட்டிளம்பருவத்தினரிலும் மிகவும் தாக்கமான மனவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கட்டுரையானது மிகவும் கடுமையான நீண்டகால முரண்பாடுகள், யுத்தங்கள், மற்றும் சர்வதேச புறக்கணிப்புகளுக்கு உட்பட்ட நாடொன்றில் சிறுவர் மற்றும் கட்டிளம்பருவத்தினரின் மனப்பிரச்சினையின் அளவுகளையும் கிடைக்கக்கூடிய சேவைகளைப்பற்றியும் சாராம்சப்படுத்துகின்றது. சிறுவர் மற்றும் கட்டிளம்பருவத்தினரின் மனநலத்தினை முன்னேற்றுவதற்கான சாத்தியப்பாடான இடையீடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் பொருத்தப்பாடான ஊயுஆர் கொள்கைகள், மனநல திட்டங்கள், உத்திகள்பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. வெற்றிகரமான ஊயுஆர் நடைமுறைப்படுத்தலில்

ஏற்படக்கூடிய சவால்கள் இனம்காணப்பட்டு சாத்தியப்பாடான தீர்வுகள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

**முக்கிய சொற்பதங்கள்:** ஈராக், சிறுவர்களும் கட்டிளம்பருவத்தினரும், இடையீடுகள், மனநலம், மனநல கொள்கைகள், வன்முறையும் ஆயுதமுரண்பாடும்

---

**அவசரகால நிலைமைகளில் ஐயுளுஊ மனநல மற்றும் உளசமூக ஆதரவு வழிகாட்டல் குறிப்புகளை நேபாலில் அறிமுகம் செய்தல் : ஒரு செயன்முறையின் விபரணம்**

**அவசரகால மனநல மற்றும் உளசமூக ஆதரவு பணிக்குழு-நேபால்**

அண்மைக்காலத்தில் இந்த புத்தகத்தில் அவசரகால நிலைகளின்போதான ஐயுளுஊ மனநல மற்றும் உளசமூக ஆதரவு வழிகாட்டல் குறிப்புகளினுடனான அனுபவங்கள் பற்றிய ஒரு பிரதிபலிப்பு பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்தப்பிரசுரமானது நேபாலில் வழிகாட்டற்குறிப்புகளின் ஆரம்ப கட்ட நடைமுறைப்படுத்தலின் கட்டங்கள் பற்றிய சம்பவக்கற்கையினை விபரித்திருந்தது. பல்-நிறுவன முறைரீதியான வழிகாட்டல் குறிப்புகளை பாவித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஊக்க இணைப்பு மற்றும் திட்டமிட்ட முறையில் மனிதநேய பணிக்குழுக்களுடன் இணைக்கப்பட்ட மனநல மற்றும் உளசமூக பகுதிகள் பற்றி விபரிக்கின்றது. மேலும் எதிர்கால நிலைகளில் வழிகாட்டற்குறிப்புகளின் பயன்படுநிலை மற்றும் உண்மையான நம்பிக்கைத்தன்மை என்பவற்றை இந்தப்படிகள் ஏற்படுத்தும் என்றும் விவாதிக்கின்றது.

**முக்கிய சொற்பதங்கள்:** ஐயுளுஊ, வழிகாட்டல் குறிப்புகள், மனநலம், உள சமூக ஆதரவு, நேபால்

---

**இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அதிகார சிக்கல் நிலைகளின்கீழ் சமூகத்திற்கும் கல்வி நிறுவனங்களுக்குமிடையிலான பங்கு நிலையிலுள்ள சவால்கள்**

இந்தக் கட்டுரையில் நாங்கள் வாசகரை வெஸ்ற் பாங்கிலுள்ள (றுநளவ டீயமெ) கிராமமொன்றிற்கு களவிஜயம் கூட்டிச்செல்கின்றோம். அதன் பின் நாங்கள் அறிக்கையில் விபரிக்கப்பட்ட சில நிகழ்வுகளை, உள்ளூர் பலஸ்தீனிய கல்வி நிறுவனமாகிய பிர்சிர் பல்கலைக்கழகத்தின் சமூக பொது சுகாதார நிறுவனத்திற்கும் (ஐஊீளு) பலஸ்தீனிய அரசசார்பற்ற நிறுவனமாகிய ஊடீசு க்குமிடையில் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட உளசமூக திட்டத்தின் முறையியல் பரிமாணங்களை ஆராய்வதற்கு பயன்படுத்தியுள்ளோம். இந்நதக் கலந்துரையாடலில் இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் கள ஆய்வுகளை செய்வதிலுள்ள சவால்களையும், கல்வி நிறுவனத்திற்கும் பங்கு நிறுவனத்திற்கும் இடையிலான கள இணைபுகளுக்கும் மேலும்

உள்ளூர் சமூகத்தினுடனான இணைப்புகளிலும் ஈடுபட்டுள்ள அதிகார நிலைப்பாடுகளில் ஏற்படும் சவால்கள் பற்றியும் குறிப்பாக பார்த்துள்ளோம்.

**முக்கிய சொற்கள்:**
ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனிய பகுதிகள், பங்குபற்றல் முறையிலான ஆய்வுகள், சமூகம்சார் புனர்வாழ்வு

## *Intervention* Manuals: now available in several languages

*Intervention* has developed and published several training manuals in the field of psychosocial support in (post) conflict areas. Various respected trainers have drawn on their training methodologies. These texts have been translated into several languages, which can be used by local trainers and aid workers in different countries.

The following manuals have been published and are available:

- **New!** '*Healing communities by strengthening social capital: a Narrative Theatre approach. Training facilitators and community workers*' by psychologist Dr. Yvonne Sliep from South Africa. This manual is published in English and French.
- **New!** '*On the Road to Peace of Mind, A guidebook. An applied approach to the training of trainers in developing countries affected by emergencies*' by Dr. Nancy Baron, an internationally experienced psychosocial trainer. This guide is published in English and Arabic, together with a complementary DVD of the film *On the Road to Peace of Mind*, about a Training of Trainers in Uganda.
- '*Training of Teachers in Areas of Armed Conflict*' written by paediatrician and child psychiatrist Dr. Anica Mikuš Kos from Slovenia. This manual originally appeared in English and was thereafter translated into Russian, Albanian, Arabic and Tamil.
- '*Training Counsellors in Areas of Armed Conflict Within a Community Approach*' by psychotherapist Dr. Guus van der Veer from the Netherlands. This manual appeared originally in English and was thereafter translated into French and Spanish.
- '*Training Refugees as Peer Counsellors*' by Jordanian/German clinical psychologist Dr. Josi Salem-Pickartz. This manual is bilingual, in both English and Arabic languages.

These manuals have also been disseminated to local organisations, schools and trainers in various countries such as North Ossetia, Ingushetia, the Russian Federation, Georgia, the Palestinian Territories, Iraq, Egypt, Jordan, Algeria, Kosovo, the Democratic Republic of Congo, Rwanda, Burundi, Uganda, Sri Lanka, Argentina, Colombia and Peru.

These manuals can now either be downloaded via www.interventionjournal.com or ordered through the War Trauma Foundation; e-mail: info@wartrauma.nl Those from low income countries may order the manuals for free. For those from high income countries, the War Trauma Foundation will charge postage.